Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 05 (07.06.2003) சனிக்கிழமை இதழ்: 246

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT சீமேந்து ராம்கோ
(சி-884)







# தேசியத் தலைவரின் உருவப்படங்களைத் தாங்கி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பேரணி!

## யாழ்.குடாநாடெங்கும் நேற்று எழுச்சிக்கோலம்

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ மாணவர் எழுச்சிநாள், தமிழர் தாயகமெங்கும் நேற்று மிகவும் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.**

**யாழ்.குடாநாட்டில் நேற்று நான்கு கல்வி வலயங்களிலும் நடந்த பேரணிகளில் - தேசியத் தலைவரின் உருவப் படங்களைத் தாங்கியவாறு, பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், உணர்வெழுச்சியுடனும் கலந்து கொண்டனர்.**

மாணவர்களின் எழுச்சிப் பேரணிகள், எழுச்சிக் கூட்டங்கள் மற்றும் கலை நிகழ்வுகள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் மிகவும் உணர்வு பூர்வமாக, தமிழீழ மாணவர் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். குடாநாடு எங்கிலும், வன்னிப் பெருநிலப்பரப்பின் அனைத்துப் பகுதிகளிலும்,கிழக்கிலுமாக நேற்று எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என்று அனைத்துப் பகுதிகளிலும் மாணவர் பேரணிகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில், பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் உற்சாகத்துடன் பங்குபற்றினர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## எங்கள் பாடசாலைகளை விட்டுவிலகி உங்கள் ஊருக்குப் போய்விடுங்கள்!

### எழுச்சிப் பிரகடனத்தில் படையினருக்கு மாணவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்கள் முடிந்து விட்ட இந்த நேரத்திலும் கூட, எமது பாடசாலைகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதும், எமது தெருக்களிலும், வயல்களிலும் - ஏன்? வீட்டு முற்றங்களிலும்கூட, இராணுவம் தனது சீருடையோடு ஆயுதம் தாங்கியபடி திரிவதும்- எமக்கு எரிச்சலையும், மனவேதனையையும் ஊட்டுகிறது'' என, நேற்று நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாளில்- மாணவர்களால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்' என்ற தலைப்பிலான இப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

தமிழர் தாயகமெங்கும் மாணவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நினைவுத்தூபி புனரமைத்தோர் மீது ராணுவத்தினர் நடத்திய அட்டகாசம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு, உரும்பிராய் - சாவகச்சேரி வீதியில், 7 ஆம் கட்டைச் சந்தியில் அமைந்துள்ள மேஜர் முரளியின் நினைவுத் தூபியை, நேற்று முன்தினம் புனரமைத்துக்கொண்டிருந்த மாணவர்களையும், பொது மக்களையும்- அன்று இரவு 8.30 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் சுற்றிவளைத்ததுடன், அச்சுறுத்தியுமுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நேற்று நடைபெற்ற தமிழீழ எழுச்சி நாளுக்கு முன்னேற்பாடாக, தமிழீழ மாணவர் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளர் மேஜர் முரளியின் நினைவுத் தூபியை மாணவர்களும் மக்களும் இணைந்து புனரமைத்துக் கொண்டிருந்த சமயமே -

இரவு 8.30 மணியளவில் பவள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்புக்குழு அதிகாரியின் அசமந்தப்போக்கும், அலட்சியமும்

உரும்பிராயில் உள்ள- மேஜர் முரளியின் நினைவுத் தூபியை, புனரமைத்துக் கொண்டிருந்த மாணவர்களையும், மக்களையும் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, உடனடியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி, ஒலே புருண்டத்துடன் தொடர்பு கொண்டபோதும், அவர் இச்சம்பவத்தைக் கவனத்திற் கொள்ளாது அசமந்தப் போக்கையே கடைப்பிடித்தார் என்று தெரிகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 3500 மீட்கப்பட்ட கண்ணிவெடிகள் நேற்று வெடிக்கவைத்து அழிப்பு!



மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால், நேற்று மட்டும் 3500 கண்ணிவெடிகள் ஒரே நேரத்தில் வெடிக்கவைத்து செயலிழக்கச்செய்யப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின அனுசரணையுடன்- சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் நிதியுதவியுடன் இயங்கும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு, கடந்த ஏப்ரல் மாதம வரை 3,81,88,950 சதுரமீற்றர் நிலத்திலிருந்து கண்ணிவெடிகளை அகற்றியிருந்தது. கடந்த ஏப்ரல் மாதம்வரை - 98,476 கண்ணிவெடிகளும், 80,993 வெடிக்காத நிலையிலிருந்த எறிகணைகள் மற்றும் வெடிபொருட்களும்- இப்பிரிவினரால் மீட்கப்பட்டு, மாதாந்தம் அழிக்கப்பட்டுள்ளன.

## புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் தற்கொலை செய்ய ஒப்பானதாம்!

### கூறுகிறார் லக்ஷ்மன் கதிர்காமர்

'தற்போதுள்ள நிலையில், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது என்பது, தற்கொலை செய்து கொள்வதற்கு ஒபபானது' இவ்வாறு, கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசும்போது - விடுதலைப் புலிகளிடம் கடலிலும் தரையிலுமாக 20 கட்டமைப்புக்கள் உள்ளன.

இந்நிலையில், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால், அவர்கள் வசமிருக்கும் கடல் மற்றும் தரையில் செயற்படும் படையணிகளைச் சட்டபூர்வமாக மாற்றிவிடுவர்கள். இந்நிலையில் சர்வதேச சமூகங்களும் ஒன்றும் செய்யமுடியாமல் போய்விடும். சைப்பிரசில் இருப்பதுபோல் ஒரு தேசத்திற்குள் இரண்டு நாடுகள் போன்ற நிலையைத் தோற்றுவிக்கும். ஆகவே, அடிப்படை விடயங்களைப் பேசி, அது நடைமுறைப்படுத்தும் காலம்வரை- இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்கு, எமது கட்சி தயாரில்லை என்றும் கதிர்காமர் கூறினார்.

## 'சிறான்' திட்ட அறிக்கையும் ரோக்கியோவுக்கு ரணிலுடன்

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதியில் மேற்கொள்வதற்காக 'சிறான்' அமைப்பினால், இனங்காணப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளும், ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பிரதமர் தலைமையிலான அரசதரப்புக் குழுவினர், இச்செயற்திட்ட அறிக்கைகளையும், தம்முடன் ரோக்கியோவுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். மேற்படி அறிக்கைகளை ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பித்து, வட-கிழக்கில் 'மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசதரப்பு கருதுவதாகத் தெரிகிறது.

## போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(கிளிநொச்சி)

கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின், கிளிநொச்சி மாவட்டப் பயிற்சி நிலையத்துக்கான, போதனாசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள் திருத்துனர், மின்னிணைப்பு, தையல்வேலை, தச்சுவேலை, மேசன்வேலை, ஆகிய பாடநெறிகளுக்கான போதனாசிரியர்களுக்கான விண்ணப்பமே கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை, 13 ஆம் திகதிக்கு முன்னர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல.354, எல்விட்டிகல வீதி, கொழும்பு - 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுள்ளார்.

## பேராசிரியர் சிவபாலனின் இசை நூல் வெளியீட்டுவிழா!

பண்ணிசைக் கலாநிதி, வித்துவான் பேராசிரியர் எஸ்.கே.சிவபாலன் எழுதிய 'உலக இசைகளுக்கு தமிழ் இசையின் பங்களிப்பு', நாட்டுப்புற இசை மரபு, ஆகிய நூல்கள் மற்றும் பண்ணிசைப் பாமாலை ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை பி.ப 3 மணிக்கு, நல்லை திருஞான சம்பந்த ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில், அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அருட்கவி இ.விநாசித்தம்பி, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, வெளியீட்டுரையை பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார்.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். 'உலக இசைகளுக்குத் தமிழிசையின் பங்களிப்பு' என்ற நூலின் ஆய்வுரையை, இராமநாதன் நுண்கலைப் பீடத் துறைத்தலைவர் நா.வி.மு.நவரெத்தினமும், 'நாட்டுப்புற இசைமரபு' என்ற நூலின் ஆய்வுரையை, யாழ். கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலனும், பண்ணிசைப் பாமாலை ஒலிப்பேழை ஆய்வுரையை, மகாவித்துவான் வீரமணி ஐயரும் நிகழ்த்துவர்.

## பல்கலை சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்கும், பேராதனை பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியானது - இன்று மாலை 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMER

N.VIGNESWARAN ARCHERY

BLACK ROAD, CHANKANAI

426(302), K.K.S ROAD, JAFFNA.

(சி-891)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல்

விஜய், சாலினி, தாமு, ராதாரவி நடித்த

**காதலுக்கு மரியாதை**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே)

**The Rock The scorpion king**

(சி-974)

**ராஜா** யாழ்ப்பாணம்.



இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

**புதிய கீதை**

தினசரி 10.30, 2.30, மட்டும்

**BEHIND ENEMY LINES (WAR FILM)**

இரவு 7.00, 9.30, மட்டும்

6 முதல் 8வரை

(சி-973)



**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வ.து**

**நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், வில் தராசுகள் ஏல விற்பனை**

இச் சமாசத்தில் இருக்கும் றொபின், என்பீல்ட் ரக நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கான பல்வேறு உதிரிப்பாகங்கள் மற்றும் வில் தராசுகள் ஆகியன நல்லநிலையில் உள்ளன. இவை எதிர்வரும் 18.06.2003 புதன்கிழமை மு.பகல் 10.00 மணிக்கு சமாசப் பணிமனையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவற்றை சமாச பணிமனை வேலை நாட்களில் பார்வையிடலாம் என்பதுடன் இது தொடர்பான மேலதிக விபரங்களையும் அறிந்து கொள்ளலாம் என்பதனை அன்புடன் தெரியப்படுத்துகின்றோம்.

*111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

தலைவர்

யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்.

(சி-1058)





தில்லையம்பதியாள் துணை

**இன்று கோண்டாவில் தில்லையம்பதியில்**

**3 ஆம் திருவிழா**

ராகம்:- ஸஹானா தாளம்: ஆதி

பல்லவி

கருணைக்கண் பார்த்தருள் தாயே! சிவகாமி.
அருளைப் பொழியும் மாயே! அடைக்கலம் அம்பிகையே (கருணை)

அனுபல்லவி

திருவளர் கோண்டாவில் தில்லையம்பதித் தேவி!
ஒருவரும் இல்லை தாயே! உன்பதமே கதியே! (கருணை)

சரணம

நினைத்து நினைத்து உந்தன்
நிழலே கதி என்று
பணிந்து வணங்கும் என்னைப்
பாலித்தருள்வாய் அம்மா!
புனைந்த மாங்கல்யம் ஆடப்
புருவங்கள் இசைந்தாட
கனிந்து நல்லருள் செய்வாய்
காலைப் பிடித்தேனம்மா!

ஆக்கம்: அருட்கவிச் செம்மல் - பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்

பாடியவர்: கலைமாமணி ரி.எம்.சௌந்தரராஜன்

**திருக்கோயில் பரிபாலன சபை தில்லையம்பதி** (சி-1060) **3 ஆம் திருவிழா உபயகாரர்**



**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம் நடாத்தும்**

**இலவச கண் சிகிச்சை முகாம்**

விழிவெண் படலக் குறைபாடு (கற்ராக்) காரணமாக பார்வை பாதிக்கப்பட்ட நலிந்த மக்களின் குறை தீர்க்கும் பணியில் கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன அவர்கள் நோயாளிகளைப் பார்வையிடுகின்றார். சத்திரசிகிச்சை தேவைப்படுவோருக்கு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும். பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இடம் : கலாசாலை மண்டபம் கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு

காலம்: 08.06.2003 காலை 7.30 மணி

*லயன் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

லயன் கலாநிதி க.குணராசா, தலைவர்.

லயன்.வ.ஸ்ரீதரன், செயலாளர்.

லயன் S.தனபாலசிங்கம், பொருளாளர்.

(சி-1057)



**மக்கள் வங்கி**

**அறிவித்தல்**

மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், சுன்னாகம் கிளையிலும் 31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில்

**பகிரங்க ஏல விற்பனை**

**செய்யப்படும்.**

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை | 19.07.2003 இலிருந்து- 22.07.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| சுன்னாகம் கிளை | 26.07.2003 இலிருந்து- 29.07.2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |

மக்கள் வங்கி

(சி-1061)

யாழ்.பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.


## 'சிறுவர் செயற்பாட்டிற்கான அழைப்பு'

## CALL FOR ACTION FROM CHILDREN

யாழ். மாவட்டத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் சிறுவர்களினது எதிர்பார்ப்புக்கள் குறித்து சிறுவர்களும், கொள்கை/தீர்மானம் மேற்கொள்ளும் தரத்திலுள்ள பெரியவர்களும் கலந்துரையாடும் -

நிகழ்வு

காலம்: 07.06.2003 (சனிக்கிழமை) காலை 10 மணி (இன்று)

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

சிறுவர் ஊடகத்துறைக்குழு
யாழ்ப்பாணம்.

வட இலங்கை பத்திரிகையாளர்
சங்கம் மற்றும்

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை

07.06.2003

பிரதான அனுசரணையாளர்கள

"எக்ஸ்போ" யாழ் - கொழும்பு - யாழ் விமான சேவை நிறுவனம்.

"சக்தி" ரீவி / எப்.எம் (ஊடக அனுசரணை) கொழும்பு.

"சிறுவர்களுக்கு நாளை என்று கூறாதீர்கள் அவர்களே எமது எதிர்காலம்"

(சி-1056)

# சட்டப்பிரச்சினைகளைக் காரணங்காட்டி இடைக்கால நிர்வாகத்தை மறுக்கக்கூடாது!

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கருத்து

உபகுழுக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படாததாலேயே, விடுதலைப் புலிகள் இடைககால நிர்வாகத்தைக் கேட்கின்றனர் என்று, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கோரிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும இடையிலான சமாதானப் பேச்சுகளின்போது, புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.

ஆனால், இந்த உபகுழுக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவிட்டது. இதனாலேயே, புலிகள் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள்.

இதன்மூலம் உபகுழுக்கள் சிறந்த பெறுபேறுகளைத் தரவில்லை என்று சர்வதேச சமூகத்துக்குப் புலிகள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது தேசவிரோதமான செயலென்றும், அரசியலமைப்புக்கு முரணானது என்றும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

ஆனால், அரசியலமைப்புக்கு அப்பால் சென்றுதான் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருக்கிறது. இதைப்போன்றே, புரிந்துணர்வு மூலம் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

இப்போதுள்ள சட்டங்களைக் காரணங்காட்டிப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை நிராகரித்துவிடக்கூடாது. அதுபோலவே, இந்தச் சட்டப் பிரச்சினைகளால் சமாதான முயற்சிகள் பிற்போடப்படவும் கூடாது என்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்தார்.

## யு.என்.எச்.சி.ஆர் செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யு.என்.எச்.சி.ஆரின் நுண்கருத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாஷையூர், பொம்மைவெளிப் பகுதிகளிலுள்ள மகப்பேற்று மருத்துவமனைகளைப் புனரமைத்தல், ஆறுகால்மடம் பழம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் என்பவற்றைப் புனரமைத்தல், மகேந்திரபுரம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு- வளன்புரம் பகுதியில் தற்காலிகமாக 32 குடிசைகளை அமைத்தல் ஆகிய திட்டங்கள் யு.என்.எச்.சி.ஆரினால் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணியில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பு அவசியம்!

## ரோக்கியோ புறப்பட முன்னர் அமைச்சர் மிலிந்த

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றில், விடுதலைப்புலிகளின் பங்கேற்பை அரசாங்கம் குறைத்து மதிப்பிடவில்லை என்று பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜப்பானுக்குப் புறப்பட்டுச் செல்ல முன்னர், செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

எந்தப் பிரச்சனைகள் வந்தாலும் சமாதானப் பேச்சுக்களும், அதனைத் தொடர்ந்துகொண்டு செல்வதற்கான முயற்சிகளும் தடங்கலின்றித் தொடரும்.

புலிகளுடன் இணைந்து பணியாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ரோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்காவிட்டாலும்,அங்கு கிடைக்கும் நிதியைப் புலிகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்தார்.

# அரச ஊழியர் எண்ணிக்கை இலங்கையிலேயே அதிகம்!

## பிரதமரின் செயலாளர் தெரிவிப்பு

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும்போது - இலங்கையில் அதிகளவிலான அரசாங்க ஊழியர்கள் பணியாற்றுவதாக, உலக வங்கியின் ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவந்திருப்பதாக, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போதே, அவர் இத்தகவலை வெளியிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

இலங்கையில், நூறு பேருக்கு 3.6 பேர் என்ற ரீதியில் அரசாங்க சேவையில் பணியாற்றுகின்றனர். இது ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிக அதிகமான தொகையாகும்.

அரசாங்க சேவையில் ஊழியர்கள் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதற்கு, இந்தத் துறையில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் அதிகமிருப்பதும் ஒருகாரணம் எனவும் உலகவங்கி ஆய்விலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையில் ஏழு இலட்சத்து எழுபதாயிரம் அரசாங்க ஊழியர்கள் பணிபுரிவதாக மதிப்பீடுகளில் இருநது தெரியவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அரச மருத்துவ அதிகாரிகள் 10 ஆம் திகதி வேலைநிறுத்தம்!

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து, எதிர்வரும் 10 ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது.

மருத்துவ அதிகாரிகளின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்கான பத்திரத்தை அமைச்சரவையில் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் பணிபுரிய அனுப்பப்பட்ட மருத்துவர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியே, இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# உள்துறை அமைச்சை பொறுப்பேற்க ஜனாதிபதி சந்திரிகா முஸ்தீபு!

## குற்றங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டப் பணிப்பு



(கொழும்பு)

நாடு முழுவதும் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டித் தருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்றைப் பணித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்- நாட்டில் சட்டம், ஒழுங்கு சீ[illegible] விட்டதாகவும், கொலைகள், கொள்ளைகள் அதிகரித்து விட்டதாகவும் கூறி உள்துறை அமைச்சை ஜோன் அமரதுங்கவிடமிருந்து பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை முன்வைத்தனர்.

இதையடுத்தே- ஜனாதிபதி சந்திரிகா, குற்றச்செயல்கள் தொடர்பான விபரங்களை தொகுதிவாரியாகத் திரட்டுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரினார்.

தொகுதிவாரியாகத் திரட்டப்படும் தகவல்களை ஆராய்ந்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு, நிமால் சிறிபால டி சில்வாவை ஜனாதிபதி பணித்தார். நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இந்த அறிக்கை தயாரிப்புக்கென குழுவொன்றும் இக்கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

இந்த அறிக்கையை வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகளிடம் தான் சமர்ப்பிக்கப்போவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டார்.

உள்துறை அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றுக் கொள்வதற்கான முதல் நடிவடிக்கையாக இது அமைந்திருப்பதாக பொ.ஐ.முவின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

# ‘சண்டி மல்லி’ படுகொலை 4 சந்தேகநபர்கள் கைது!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்!

தென் மாகாண அமைச்சர் ‘சண்டி மல்லி’ படுகொலை தொடர்பாக நான்கு முக்கிய சந்தேகநபர்களைக கைது செய்திருப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரதாபசிங்க தெரிவித்தார்.

‘சண்டி மல்லி’ படுகொலை தொடர்பான விசாரணைகள் வேகமாக இடம்பெற்று வருவதாகவும், வீரக்கொடி என்ற முக்கிய பாதாள உலகக் குழுவொன்றின் தலைவர் உட்பட நால்வர் கொழும்பிலும், அம்பாந்தோட்டையிலும் வைத்துக் கைது செய்யபபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வீரக்கொடியிடம் இருந்து இக்கொலை தொடர்பாக - பெருமளவு தகவல்களைத் திரட்டிக்கொள்ள முடிநததாகக் குறிப்பிட்ட அவர், இன்னும் மூன்று தினங்களில் இக்கொலையில் சம்பந்தப்பட்ட அனைத்துக் குற்றவாளிகளும் பொலிஸாரால் கைது செய்யப்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

# கடற்படை பீரங்கிகளுக்கான கேள்விப் பத்திரங்கள் ரத்து!

கடற்படையின் அதிவேக தாக்குதல் படகுகளில் 30 மீ.மீ பீரங்கிகளைப் பொருத்துவதற்காக கோரப்பட்டிருந்த கேள்விப்பத்திரங்களை, பாதுகாப்பு அமைச்சு ரத்துச்செய்வதாக அறிவித்துள்ளது.

முப்பத்திநான்கு 30 மி.மீ. பீரங்கிகளை அதிவேகத் தாக்குதல் படகுகளில் பொருத்துவதற்கும், மேலும் அடித்தள வசதிகளுடன் பதினைந்து 30 மி.மீ. பீரங்கிகளுக்கும், ஐம்பதாயிரம் சுற்று ரவைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சு கேள்விப் பத்திரங்களைக் கோரியிருந்தது.

இந்தக் கேள்விப் பத்திரங்களை பாதுகாப்பு அமைச்சு ரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம், கடற்படைக்கென 30 மி.மீ ‘புஷ் மாஸ்ரர்’ ரகப் பீரங்கிகளை வழங்க இணக்கம் தெரிவித்ததையடுத்தே பாதுகாப்பு அமைச்சு இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.




சர்வதேச தரத்திலான கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை ...ற்றுமுன்தினம் முடித்துக்கொண்ட மனிதநேய கண்ணிவெடி அகற்றும் ...வின் அணியொன்றைப் படத்தில் காணலாம்.

... அனுப்ப... ளுக்கு ... க!

## பாஷையூர் புனித அந்தோனியார் திருநாள்

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் திருப்பலி எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகி, பி.ப. 5.30 மணிக்குத் தேர்ப்பவனியும் புனித நடை ஆசியும் இடம்பெறவுள்ளது.

# மருதங்கேணியில் மீண்டும் நடமாடும் சுகாதார சேவை!

## திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியது

(ஆழியவளை)

மருதங்கேணிப் பிரதேசத்தில், மீண்டும் கடந்த திங்கட்கிழமை முதல் நடமாடும் சுகாதார வைத்திய சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால், மூன்று இடங்களில் இச் சேவை நடாத்தப்பட்டு வருகின்றது. திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் உடுத்துறை - வேம்படியிலும், செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் மாமுனையிலும் - புதன், சனி ஆகிய நாட்களில் கட்டைக்காட்டிலும் இச்சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் சுகாதார சேவையின் ஆரம்பநிகழ்வு, கடந்த திங்கட்கிழமை மருதங்கேணிப் பிரிவுத் தலைவர் ச.திரவியராசா தலைமையில் உடுத்துறை - வேம்படியில் நடைபெற்றது. மங்கள விளக்கினை வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத் தலைவர் சி.பொன்னம்பலமும், நடமாடும் வைத்தியசேவை வைத்தியர் எஸ்.அருளானந்தமும் ஏற்றிவைத்தனர். இந்நிகழ்வில் - கிராம அலுவலர்கள் எம்.தவராசா, வி.நடராசா, உபதபாலதிபர் ந.ஸ்ரனிஸ்வொல் ஆகியோரும் கலந்து கொண்டனர். (122)

# நாய்களின் இனவிருத்தியை தடைசெய்ய சத்திரசிகிச்சை

சத்திரசிகிச்சை மூலம் வளர்ப்பு நாய்களின் இனவிருத்தியைத் தடை செய்யும் நடவடிக்கை, சனசமூக நிலையங்கள் ரீதியாக இடம்பெற்று வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும், கால்நடை வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து இந்த சத்திரசிகிச்சையை நடத்தின. யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட நாய்களுக்கான சத்திரசிகிச்சை இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது. (15,116)

## திரியாய் அம்மன் பொங்கல் விழா

(ஆழியவளை)

சரித்திரப் பிரசித்திபெற்ற இயக்கச்சி - முகாவில் திரியாய் அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா, நேற்றுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பல வருடங்களாகப் படையினரால் இவ்வாலயப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. 2000 ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள்' நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளால் இப்பிரதேசம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து - இவ்வருடம் பொங்கல் நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஆலய பரிபாலன சபை நடவடிக்கை எடுத்திருந்தது. (122)

# அரசியல் எதிர்காலத்தை சீர்குலைக்க எனது கட்சிப் பத்திரிகைகளே முயற்சி

## ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றஞ்சாட்டுகிறார்

தனது அரசியல் எதிர்காலத்தைச் சீர்குலைப்பதற்கு, தமது கட்சிப் பத்திரிகைகளே முயற்சி செய்து வருவதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனக்கு எதிராக - கட்சிப் பத்திரிகைகள் சில, ஊழல் மோசடி மற்றும் தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை சுமத்த முயற்சி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பத்திரிகையில் - இவ்வாறான உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தால், அதனை ஒரு பொருட்டாக எடுத்திருக்கப் போவதில்லை. இந்தக் குற்றச்சாட்டை எனது கட்சிப் பத்திரிகையே சுமத்தியிருப்பதுதான் கவலை தருகிறது.

என் மீதான இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, கட்சியில் எந்தப் பதவி வகிப்பவராக இருந்தாலும், அது ஜனாதிபதியாக இருந்தாலும் கூட பகிரங்கத் தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு சவால் விடுவதாகவும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார்.

## அம்பனில் மலசல கூடங்கள் அமைக்க உதவி

(ஆழியவளை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அம்பன் கிராமத்தில் 'போரூட்' நிறுவனத்தாரின் உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

15 ஆயிரம் ரூபா செலவில் இக் கிராமத்தில் உள்ள ஏழு குடும்பங்களுக்கு முதற்கட்டமாக, மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாக, போரூட் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இத்திட்டம் - குடத்தனை, பொற்பதி, மணற்காடு ஆகிய கிராமங்களிலும் செ யற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மே மாதம் மட்டும் 19 பேருக்கு செயற்கைக் கால்கள்

(ஆழியவளை)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினர், கடந்த மே மாதத்தில் மாத்திரம் 19 பேருக்குச் செயற்கைக் கால்களைப் பொருத்தியுள்ளனர்.

மேலும் ஆறு பாதணிகள், 23 புதிய பாதம் மாற்றல், இரண்டு பூட்டு மாற்றம் ஆகிய பணிகளும் வெண்புறாவினால் செய்யப்பட்டுள்ளன.(122)

## உடதலவின்ன வழக்கில் மூவர் அடையாளம் காட்டப்பட்டனர்!

(கொழும்பு)

கண்டி - உடதலவின்னவில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என மூவர் நேற்று முன்தினம் சாட்சி ஒருவரால் அடையாளம் காட்டப்பட்டனர்.

இராணுவத்தைச் சேர்ந்த லெப் னன்ட் விஜேரட்ண, சுனில் சந் சிறி, திசநாயக்க ஆகியே அப்படுகொலைகளில் நேரடியா தொடர்புபட்டிருந்ததாகச் சா ஒருவர் அடையாளம் காட்டின

# ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டனரா?

## விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடந்த காலங்களில் ஏதாவது அதிகார துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா என்பதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், முறைகேடாக நடந்து வருகின்றார்கள் என்று கிடைத்து வந்த முறைப்பாடுகளின் அடிப்படையில், அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையே தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவர் மீதாவது குற்றம் சுமத்தப்பட்டிருந்தால், அவர் மீது உடன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மன்னாரில் படையினர் தங்கியுள்ள கட்டடங்கள் குறித்து மதிப்பீடு!

## நிறைவு பெற்றதாக அரச அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் படையினர் தங்கியுள்ள பொதுக்கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டிடங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் பணி பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த விபரம் திரட்டும் நடவடிக்கையில் விடுதலைப்புலிகள் சார்பில் அருணா, இராணுவத்தினர் சார்பில் கேணல் ஜெயக்கொடி, பொலிஸாரின் சார்பில் பிறேமசிறி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் மரியநாயகம் குரூஸ், மற்றும் செயலக அதிகாரிகளும் ஈடுபட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

படையினர் தங்கியுள்ள தனியார், பொது கட்டடங்கள் தொடர்பான மதிப்பீட்டறிக்கை, இறுதி செய்யப்பட்டு உரிய தரப்புக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# விவசாயம் தொடர்பான செயலமர்வு காரைநகரில்

"விவசாயக்கடன்கள், விவசாயக் காப்புறுதி மற்றும் ஓய்வூதியம்" என்னும் செயலமர்வு இன்று காரைநகரில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீட தகவல் தொடர்பு மையத்தின் மாணவர் பகுதி இந்தச் செயலமர்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலகத்தில் - இன்று மதியம் 2 மணியளவில் இடம்பெறும் இச்செயலமர்வில், தொடக்கவுரையினை யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி சு.இராஜதுரை நிகழ்த்துவார்.

இச்செயலமர்வின்போது - விவசாயம் மற்றும் விவசாயக் கடன்வசதிகள் தொடர்பாகப் பலர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.



தென்பகுதி வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபடவந்த இந்தியப் படையினரைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நன்றி தெரிவித்து வழியனுப்புகிறார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்!

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I /II இல் நியமனத்தை பொறுப்பேற்ற தினத்திலிருந்து மூன்று வருட காலப்பகுதியில் திருப்திகரமான வரவினைக் கொண்டுள்ள, வினைத்திறன் காண்தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மற்றும் வேலை நடத்தையில் ஒழுங்காகக் கடமை புரிந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பதவியில் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் - மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கும், பிரதேச பிரதிச் சமுர்த்திப் பணிப்பாளருக்கும் சுற்றறிக்கையொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதிகளுக்கு அமைவான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, பதவியில் நிரந்தரமாக்குவதற்கான விண்ணப்பப் படிவங்களும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், பிரதேச பிரதி சமுர்த்திப் பணிப்பாளர் ஆகியோர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்

பெயர் : சு.ஜதுஷன்
முகவரி : ஆதியாமலை,
உடுப்பிட்டி.



ஏழாவது அகவையில்



பெயர் : வி.விசு...

## வார்த்தை விளையாட்டு - 36

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ரோ | | 2 | 3 | | |
| | | | 4 க | | |
| 5 | | ட | | | |
| | | 6 | | கா | |
| ய | 7 | | ம் | | |
| | | | 8 | வ | |

முழுப் பெயர் : ......................................

கற்கும் பாடசாலை : ......................................

கற்கும் தரம் : ......................................

முகவரி : ......................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. ஜப்பானின் தலைநகர்
3. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சித்தர்.
4. ஒரு மிருகம்.
5. இறைவன்.
6. வெயிலின்போது தெரியும் நீர் (திரும்பியுள்ளது)
7. தொடக்கம்.
8. பாதுகாப்பு.



### மேலிருந்து கீழ்

1. ஒரு மலர்.
2. கேலி
4. அவதானம்.
5. வானம்.
7. ஒரு தமிழ் மாதம்.

## வார்த்தை விளையாட்டு - 35 இன் சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சமுத்திரம்.
4. தகரம்.
5. விரைவு.
6. அயல்.
7. சிலம்பு.
9. மல்லி.



**மேலிருந்து கீழ்**

1. சக்கரம்.
2. முதலாளி.
3. திரவியம்.
6. அலரி.
8. வலி.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,



**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 11-06-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 35

இல் பங்குபற்றிச் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.



*1 ஆம் பரிசு -*
**இ.கோபிராஜ்**
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

*2 ஆம் பரிசு -*
**ஜே.மேஜாய்**
115, பொன்னம்பலம் வீதி
அரியாலை.



*3 ஆம் பரிசு -*
**த.கஜலக்ஷன்**
370, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## நரியாரைக் கட்டிவைத்த முயலார்

முயலார் வாழ்ந்து வந்த இடத்தில் ஒவ்வோர் ஆண்டும் பொம்மை விழாக்கொண்டாடுவது வழக்கம். மனிதர்களைப் போலப் பொம்மைகளைச் செய்து, சக்கர நாற்காலியில் வைத்து இழுத்து வருவார்கள். நாற்காலியை இழுத்து வருபவர் 'எனது பொம்மையைப் பாருங்கள். ஏதும் பிச்சை போடுங்கள்' என்று கத்துவார். வழியாற் போகிறவர்கள் தங்கள் தங்களால் இயன்ற பணத்தைப் போட்டுச் செல்வார்கள்.

பொம்மை விழாநாள் வந்தபொழுது நரியாரும், ஓநாயாருமாகச் சேர்ந்து, விழா என்ற சாட்டில் முயலாரைத் தீர்த்துக் கட்டத் திட்டம் தீட்டினர்.


திட்டத்தின்படி நரியாரைப் பொம்மைபோல ஒப்பனை செய்தார் ஓநாயார். அவருடைய முகத்தில் பல்லிளிக்கும் மனித முகம் போன்றதொரு முகமூடி அணிந்தார். முகமூடியின் கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரு துவாரங்கள் இடப்பட்டன. அவற்றினூடாக நரியார் தமக்கு அருகில் வருபவர்களை நன்றாகப் பார்க்கலாம்.

பல்லிளிக்கும் முகமூடி, உடம்பு முழுவதையும் மறைக்கும் மேற்சட்டை, கீழ்ச்சட்டை, கால்களில் சப்பாத்து, இவற்றோடு சக்கர நாற்காலியில் அமர்ந்த நரியார் - உண்மையில் ஒரு மனிதப் பொம்மையாகவே காட்சிதந்தார்.

"இந்த வேடம் புதுமையாய் இருக்கும். அதைப்பார்க்க ஆசைப்பட்டு முயலார் அருகில் வருவார். அப்பொழுது அவரைப் பற்றிப் பிடித்து விடலாம்" என்பதே நரியாரும், ஓநாயாரும் வகுத்த திட்டம்.

"எனது பொம்மையைப் பாருங்கள் ஏதும் பிச்சை போடுங்கள்" என்று பாடியபடி ஓநாயார் நரியாரைச் சக்கர நாற்காலியில் வைத்து இழுத்த படி தெருவால் வந்தார்.

இந்தக் காட்சியை முதலிற் கண்டவர் ஆமையார். அவரோ உருவத்தில் மிகச் சிறியவர். அவருக்குப் பொம்மையின் காற்பக்கமே தெளிவாகத் தெரிந்தது.



'என்ன ஆச்சரியம! பொம்மையின் ஒரு காலில் அணிந்திருந்த சப்பாத்தில் துவாரம்! அதனூடாக உள்ளே தெரிந்த காலின் நிறம் பொம்மைக்குரிய நிறமாக இல்லையே! மண்ணிறமாக வல்லவா தோன்றுகிறது'!

ஆமையாருக்குப் பலத்த சந்தேகம். இது பொம்மையல்ல உயிருள்ள யாரோ, பொம்மைபோல வேடம் தரித்திருக்க வேண்டும்.

தமது சந்தேகத்தைத் தீர்க்க - ஆமையார் முயலாரிடம் போனார். தாம் கண்டதை எடுத்துரைத்தார்.

(காலின் நிறம் மண்ணிறம்! அப்படியானால்....?)

முயலாருக்கு விளங்கி விட்டது. "ஓநாயார் இழுத்து வருவது பொம்மையல்ல. நரியார்தான் பொம்மையாக வேடம்போட்டு வருகிறார்!" என்றார் முயலார். ஆமையாருக்கும் உண்மை புலப்பட்டுவிட்டது. "இது எனக்கு எதிராக ஓநாயாரும், நரியாரும் போட்ட சதித்திட்டம். நரியாருக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்".

முயலார் - ஆமையாருக்கு விடயத்தை எடுத்துச் சொன்னார். அவரை அழைத்துக்கொண்டு தமது வீடு சென்றார். ஒரு கயிற்று முடிச்சை எடுத்துச் சட்டைப் பையினுள் இட்டார். இருவரும் நரியாரை ஓநாயார் இழுத்து வரும் இடத்திற்குச் சென்றார்கள். "ஓநாயாரே, ஏதோ அவசிய காரியமாம். உடனே வரும்படி வீட்டில் சொன்னார்கள். நீர்போய் திரும்பும்வரை இந்தப் பொம்மைப் பவனியை நான் நடத்தி உதவுகிறேன்" என்று ஓநாயாரைப் பார்த்து முயலார் சொன்னார்.

"நாங்கள் போட்ட வலையில் முயலாரே வந்து சிக்குகிறார். எங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்" என்று ஓநாயாரும், நரியாரும் மகிழ்ந்தார்கள்.

ஓநாயார் " நல்லது. நான் வரும்வரை கவனமாகப் பொம்மையை இழுத்துச் செல்லும்"

"எனது பொம்மையைப் பாருங்கள் ஏதும் பிச்சை போடுங்கள்,

என்று வழியில் ஆட்களைக் காணும்பொழுது நீர் பாடவேண்டும். இதோ... இதோ... இந்த நாற்காலியிலே கொழுவியிருக்கும் தொப்பியில் பணம் போடுவார்கள். அதில் நீர் கைவைத்தால் உம்மைத் தொலைத்துவிடுவேன்". என்று எச்சரிக்கை செய்துவிட்டு ஓநாயார் தமது வீடு நோக்கிப் போனார்.

ஆமையாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவர் தொலைவில் நின்று அங்கு நடக்கப் போவதை வேடிக்கை பார்க்கத் தயாரானார். முயலார் - நரியார் இருந்த சக்கர நாற்காலிக்கு அருகில்சென்றார். "இந்த வேடத்தில் முயலார் மீது பாய்ந்தால் எல்லாம் பிழைத்து விடும். ஓநாயார் வரட்டும். பிறகு பார்ப்போம்" என்று நரியார் ஆடாமல் அசையாது இருந்தார். "அட, இந்த பொம்மை வழக்கத்துக்கு மாறாகக் கூனியபடி இருக்கிறதே. சக்கர நாற்காலியைத் தள்ளும்போது, முன்னால் விழுந்து விடுமே. ஆகையால், நாற்காலி பின் சட்டத்தோடு இதைக் கட்டி விடுவதுதான் புத்தி" என்று உரக்கச்செல்லிய வண்ணம் முயலார் தமது சட்டைப் பையினுள்ளே இருந்த கயிற்றை எடுத்தார்.

திருடனுக்குத் தேள் கொட்டினால் என்ன செய்வான்? வலி ஏற்பட்டாலும் பல்லைக் கடித்துக் கொண்டு மௌனமாக இருப்பான். நரியார் நிலையும் திருடன் நிலைதான். அவர் தொடர்ந்து அசையாமல் பொம்மை போலவே இருந்தார்.

அந்த வேளையில் - அவ்வழியால் வெள்ளாட்டார் வந்தார். "வெள்ளாட்டாரே பொம்மை விழுந்து விடும்போல் இருக்கிறது. தயவுசெய்து நான் இதை நாற்காலிச்சட்டத்தோடு கட்டும்வரை இறுக்கிப்பிடியும்". என்று முயலாளர் வெள்ளாட்டாரை வேண்டினார். வெள்ளாட்டாரும் அதற்குச் சம்மதித்து பொம்மையாய் இருந்த நரியாரை இறுக்கிப்பிடித்தார். முயலார் தமது கயிற்றால் நரியாரை இறுக்கக் கட்டினார்.

"எனது பொம்மையைப் பாருங்கள், ஏதும் பிச்சை போடுங்கள்".

முயலார் பாடிக்கொண்டு சக்கர நாற்காலியைத் தள்ளியபடி நடந்தார். அந்தக் காட்சியைக் கண்டு ரசித்தவர்கள் நாட்காலியில் மாட்டியிருந்த தொப்பிக்குள் காசு போட்டார்கள். பவனி தொடர்ந்தது. நரியாரால் கட்டின் இறுக்கத்தைத் தாழ முடியவில்லை. அவர் தம் உடலை அசைத்தார். கட்டிலிருந்து விடுபடப் பலவாறு முயன்றார். கூடவில்லை.

"இது என்ன முயலாரே உமது பொம்மை ஏன் இப்படி திமிறி அசைகின்றது? இது உயிருள்ள பொம்மையா, என்ன?" என்று சிலர் கேட்டார்கள். அவருக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. "ஓ! பொம்மை வேடத்தில் இருப்பவர் யார் என்று நினைத்தீர்கள்? இவர்தான் நரியார். இவர் எனக்கு அடிக்கடி தொல்லை கொடுப்பது வழக்கம். இதற்கெல்லாம் தண்டனையாகத்தான் இவரைப் பிடித்துப் பொம்மை வேடம் போட்டுக் கட்டி இழுத்து வருகின்றேன்" என்றார் முயலார்.

"நீர் கெட்டிக்காரர் தான். நரியார் இனி உம்மோடு சேட்டை விடமாட்டார்" என்று அவர் முயலாரைப் பாராட்டிச் சென்றார். நரியாருக்கோ ஆத்திரம் என்ற ஆத்திரம்! அவர் தமது முழுப்பலத்தையும் சேர்த்து கட்டுக்களிலிருந்து விடுபட முயன்றார். கூடவேயில்லை. "ஆமையாரே, இந்தாரும் இந்தப் பணத்தைக் கொண்டு சென்று றொக்கட் வெடி வாங்கி வாரும். நரியாருக்குச் சொக்கப்பானை என்றால் என்ன என்பதைச் செயலில் காட்டுவோம்" என்று சொல்லி, முயலார் தொப்பிக்குள் சேர்த்திருந்த பணத்தை எடுத்து ஆமையாரிடம் கொடுத்தார். ஆமையார் றொக்கற் வெடி வாங்கி வருவதற்கிடையில் முயலார் வீதியில் கிடந்த குப்பை கூழங்களைச் சேர்த்து, நரியார் இருந்த சக்கர நாற்காலியைச் சுற்றிவளைத்து இட்டார். நரியாரை முற்றாக எரித்துக் கொல்வது முயலாரின் நோக்கம் அல்ல. ஆனால், நரியாரோ தமக்குச் சாவே வந்து விட்டதாக நினைத்துப் பரிதாபமாக ஊளையிடத் தொடங்கினார். அவரின் ஊளைச் சத்தம் ஓநாயாருக்குக் கேட்டது. தம்மை வீட்டில் யாரும் அழைக்கவில்லை. இது முயலாரின் சூழ்ச்சி, என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிய வந்தது. மிகுந்த கோபத்துடன் தாம் நரியாரை விட்டுவந்த இடத்திற்கு ஓடிவந்தார். ஆனால், முயலார் அந்த இடத்திலிருந்து தொலைதூரம் நரியாரைக் கொண்டு சென்று விட்டாரே! என்றாலும், அவர் ஊளையிட்ட சத்தம் வந்த இடத்தை நோக்கி ஓநாயார் விரைந்தார். ஓநாயாரைக் கண்டதும் "என்னைக் காப்பாற்றும் என்னைக் காப்பாற்றும்" என்று நரியார் அவரை நோக்கி அவலக் குரல் எழும்பினார்.

ஆனால், அதற்கிடையில் முயலார் சக்கர நாற்காலியின் நான்கு கால்களிலும், றொக்கற் வெடியைப் பொருத்தி அவற்றைத் தீ வைத்துவிட்டார். அந்த வெடிகளில் இரண்டு நேராக எழுந்து மேலே சென்று ஓநாயாரின் தலையில் விழுந்தன. நரியார் வெடிச் சத்தத்திலேயே மயங்கி நாற்காலியிலே ஒரே அடியாகச் சாய்ந்து விட்டார். ஆனால், வெடிகளுக்கு வைத்த நெருப்பில் பொசுங்கி அவரைக் கட்டியிருந்த கயிறு அறுந்து போயிற்று.

நரியார் மயக்கத்திலிருந்து விடுபட்ட பொழுது - ஓநாயார் வேதனையோடும் தம் அருகில் வருவது அவருக்கு மங்கலாகத் தெரிந்தது. முயலாரை வெல்லவோ, கொல்லவோ முடியாது என்பதை ஓநாயாரும், நரியாரும் தெரிந்து கொள்ள இவ்வளவு காலம் பிடித்தது!

# இளந்தேனீக்கள் கழகம்

## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
த.சுபிஸ்ரா
கற்கும் பாடசாலை :-
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
துனுக்குகள் சேகரித்தல், கதைப்புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.



முழுப்பெயர் :-
கு.நிதர்சன்
கற்கும் பாடசாலை :-
வேலாயுதம் மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :
கல்வித்துறை, விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :-
சி.கஜந்தன்
கற்கும் பாடசாலை :-
சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், உதைபந்து.



முழுப்பெயர் :-
த.கஜலக்ஷன்
கற்கும் பாடசாலை :-
மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:-
சா.கௌரிசா
கற்கும பாடசாலை :-
வதிரி திருதயக் கல்லூரி
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:-
க.அனுசியா
கற்கும் பாடசாலை :-
இந்து ஆரம்பப் பாடசாலை.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல்.


முழுப்பெயர்:-
இ.அனுசியா
கற்கும் பாடசாலை :-
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரக் கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, கல்வித்துறை.

முழுப்பெயர்:-
து.வின்சன்
கற்கும் பாடசாலை :-
கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், படித்தல்.

# ஆண்டு பல வாழ்க

கொஞ்சு தமிழில் கவிதை பாடும்
பிஞ்சு மனங்கள் வாழ்க.
பஞ்சு போன்ற பாதம் கொண்ட
பாலர் நீங்கள் வாழ்க.

அஞ்சிடாமல் பள்ளி சென்று,
அன்புடனே கற்று
அம்மா அப்பா ஆசியுடன்
ஆண்டு பல வாழ்க



# எனக்கும் நன்றி உண்டு!



காட்டில் துள்ளி விளை யாடிக் கொண்டிருந்த புள்ளிமான் ஒன்று, தண்ணீர் குடிப்பதற்கு காக ஏரிக்குச் சென்றது. அங்கே, தண்ணீரில் மிதந்து தத் தளித்துக் கொண்டிருந்த கட் டெறும்பொன்று - மானைப் பார்த்துத் தன்னைக் காப்பாற்றும் படி கேட்டுக்கொள்ள, இரக்கப் பட்ட மான், தன் காலை தண் ணீரில் கட்டெறும்பின் அருகில் வைத்தது. கட்டெறும்பு மானின் காலில் தாவி ஏறிக்கொள்ள கரை யேறியது மான்.

அடுத்த வினாடி, மானின் காலை சுரீரென்று கடித்தது கட்டெறும்பு. வலிதாளாமல் துடிதுடித்து ஓடியதுமான். வெகுதூரம் ஓடியபின் நின்று, பெருமூச்சு வாங்கியபடி "உன்னை நான் காப்பாற்றியதற்கு நீ எனக்குக் காட்டிய் நன்றிக்கடன் இதுதானா?" என்று கட்டெறும்பிடம் பரிதாபக் குரலில் கேட்டது மான்.

"நான் அந்த அளவுக்கு மோசமானவன் இல்லை. உனக்குத் தெரியாது, நான் உன்னைக் கடித்திருக்காவிட்டால் நீ இவ்வளவு தூரம் வேகமாக ஓடிவந்திருக்கமாட்டாய். அருகிலிருந்த புதரில் மறைந்திருந்த சிறுத்தை, உன்மீது பாய்ந்து, உன்னை அடித்துக் கொன்றிருக்கும்!" என்றபடி தன்னை நீரிலிருந்து வெளியே எடுத்துக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லி விடைபெற்றது கட்டெறும்பு.

# விடுகதைகளும் விடைகளும்

1. முற்பாதி பறவையின் பெயர், பிற்பாதி மரத்தின் பெயர். அவ்வூர் எது?
கிளிநொச்சி.
2. முற்பாதி போய்விட்டால் காணி எல்லை. பிற்பாதி போய்விட்டால் தாகம் தீரும். அது என்ன?
நீர்வேலி
3. முற்பாதி தும்பிக்கையுள்ள மிருகம், பிற்பாதி அரசனின் பாதுகாப்பரண். அவ்வூர் எது?
ஆனைக்கோட்டை
4. திங்கள் வருவதேன், திருவிளக்கிடுவது ஏன்?
ஞாயிறுபோக
5. சிரித்துக் கொண்டே இருக்கும் எழுத்து. எது?
ஈ
6. கேட்டுக் கொண்டே இருக்கும் எழுத்து எது?
தா
7. துரத்திக் கொண்டே இருக்கும் எழுத்து எது?
போ
8. தொட்டால் சுடும் எழுத்து எது?
தீ
9. எப்போதும் வலியால் துடிக்கும் எழுத்து?
ஆ
10. தேனீக்களுக்கு விருந்து கொடுக்கும் எழுத்து எது?
பூ

இ.கிருஷ்சிகா
தரம் - 4
யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.


1. கசக்கிப் பிழிந்தாலும், கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
2. நெருப்பிலே வெந்தவள், அலங்கரிக்க உதவு கிறாள். அவள் யார்?
3. அடிமேல் அடிவாங்கினாலும், அனைவரையும் சொக்கவைக்கும். அது என்ன?
4. மக்கத்துக்காசு எண்ணமுடியாது. மகராசிப் பட்டு மடிக்கமுடியாது. அது என்ன?
5. தட்... தட்... என்று தட்டினால், பட்...பட்... என்று பதில் தருவான். அவன் யார்?



1. கரும்பு
2. தங்க நகை
3. மிருதங்கம்
4. வானமும், நட்சத்திரமும்
5. கணினி

சிவகௌரி மகேந்திரன்
தரம் 5
யாழ். பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

# உங்கள் கைவண்ணம்



லோகநாதன், சர்மினி,
தரம் - 5,
றாஜ்மகால்,
கரவெட்டி மத்தி,

# நாடுகளின் தேசியப் பறவைகள்

| நாடுகள் | | தேசியப் பறவைகள் |
|---|---|---|
| 1. இலங்கை | – | காட்டுக்கோழி |
| 2. இந்தியா | – | ஆண்மயில் |
| 3. கனடா | – | வாத்து |
| 4. ஐக்கிய அமெரிக்கா | – | கழுகு |
| 5. அவுஸ்திரேலியா | – | சவாலோ பறவை |
| 6. தென்னாபிரிக்கா | – | நீலக்கொக்கு |

ப.மதிவதனி
தரம் – 6
மகாஜனாக் கல்லூரி.

# my self

My name is Sothiligam nisanth. I live in uduvil. I am fourteen years old. my father name is P.Sothiligam. my mother name is S.Vasanthy. I study at St.Henry's College. I have two sisters and one brother. My favourite subject is English.

S. Nisanth,
St.Henry's College.
year- 09

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................. ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்சுழிக்கல் ஆகா அரண்.

-திருக்குறள்

# நமது நோக்கு

## எழுச்சி கொள்ளும் இளந்தமிழினம்!

நேற்று நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாள் பேரணிகள் உணர்வெழுச்சியுடனும், ஆயிரக் கணக்கான மாணவர்களின் பங்கேற்புடனும் நடந்தேறியதை நோக்கும்போது -

சுதந்திர வேட்கையையும், இன அழிப்பிற்கு எதிரான விழிப்புணர்ச்சியும், மாணவர்களிடையே மிக உயர்ந்த நிலையிலிருப்பதை உணரமுடிகின்றது.

ஒரு சமூகத்தின் மிக முக்கிய பங்கினரும், அச்சமூகத்தின் உயிரோட்டமான வலுவுமான மாணவர்களே - அச்சமூகத்தின் எதிர்காலத்தைக் கட்டியம் கூறுபவர்களாவர்.

வரலாற்றை, ஒரு சந்ததியிலிருந்து மற்றைய சந்ததிக்கும் காவிச் செல்பவர்கள் அவர்களே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களான மாணவர்கள்தான் - இன்று தமிழினம் சுதந்திரமும், தன்னாட்சியும் வேண்டிநிற்கவும், போராட்டம் வளர்ச்சியுற்று இலங்கைத்தீவின் சமதையான ஆட்சியாளர்களாகத் தமிழினம் பெருமை பெறவும் - அச்சாணியானவர்கள் என்றால் மிகையில்லை என்றே கூறலாம்.

சிங்கள அரசாங்கங்கள், தமிழினம் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளை காலத்துக்குக் காலம் பிரயோகித்து வந்தவேளையில் - தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களைத் தட்டிப்பறிப்பதாக, பல்கலைக்கழக அனுதியில் தரப்படுத்தலைக் கொண்டுவந்தபோதே - இனியும் பொறுப்பதற்கில்லை என இளைய தமிழர்கள் பொங்கியெழுந்தனர்.

தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட பெரும் புரட்சிகர மாற்றமாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்ததோடு,

போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி - தமிழினம் கொண்டிருந்த பலத்தையும் துணிவையும் அவர்களுக்கே காட்டி - விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் சென்றவர்கள் மாணவர்களே.

பொன்.சிவகுமாரனோடு தீப்பொறியாய் எழுந்த - அடக்குமுறைக்கு எதிராக, அடித்துச் சொல்லி ஒடுக்குமுறையாளனை ஓட ஓட விரட்டும் உத்தி,

இன்று ஆட்லறிகளும், டாங்கிகளும், பல்குழல் பீரங்கிகளும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளும், கடற்கலங்களும் கொண்டதான தமிழ்ப்படையாக விடுதலைப் புலிகளை உருவாக்கியிருக்கிறதென்றால் - இந்த வளர்ச்சியில் மாணவர்கள் ஆற்றிய பங்கும் அளப்பரியதொன்றே.

தமிழீழ விடுதலைப் போராட்டம், நெருக்கடிகளைச் சந்தித்தபோதெல்லாம் - மாணவர்கள் அலைஅலையெனத் திரண்டு போராட்டத்தில் பங்குதாரர்களானதும்,

போர்க்களங்களில் மட்டுமல்ல - களப்பின்னணி வேலைகளிலும் மாணவர்கள் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு, கண்துஞ்சாது ஆற்றிய அரும்பணிகளையும் தேசம் மறக்காது.

அரசியல் ரீதியாக தமிழர் தாயகம் முழுவதையும் ஒரே அணியில் திரளவைத்த - பல்கலைக்கழக மாணவர்களின் 'பொங்கு தமிழ' - தமிழினத்தின் விடுதலைப் நோக்குக்குப் புத்துணர்ச்சியைத் தந்ததும்,

ஒரே குரலில் - தமிழினம் ஒன்றுபட்டு நிற்பதை உலகிற்கு உணர்த்தி - தமிழ் மக்களின் அபிலாஷைகள் இவைதான், தமிழ் மக்களின் தலைமை இதுதான் என்பதை உறுதிபட சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொன்னதும் தமிழின வரலாற்றின் வைர வரிகளே.

இந்தவகையில், தமிழ் மாணவர்களின் சுதந்திர வேட்கையும், ஓங்கிய தெளிவும் இன்றைய சமாதான காலத்திலும் மங்கிவிடாமல், சீர்நிலையில் இருப்பதைத் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் எடுத்துக் காட்டியிருக்கின்றது.

இனிவரும் அரசியல் நகர்வுகள், சர்வதேசத்தின பங்குபற்றியெல்லாம்" - யுத்தகாலத்தைவிட கூடுதல் விழிப்புணர்வுடன் மக்கள் இருக்க வேண்டிய போதும்,

தமிழ் மக்கள், இந்த அமைதிக்காலத்தில் சுமுக வாழ்வுக்குத் திரும்ப முடியாது தடைப்பட்டிருக்கின்ற அவலநிலை தொடர்பாகவும் - மாணவர்கள் இந்தச் சமூகத்தை சரியான நிலையில் வழிச் செலுத்துபவர்களாகப் பங்களிப்பார்கள் என்ற நம்பிக்கையை - நேற்றைய எழுச்சி தினம் நம்பிக்கையூட்டியிருக்கிறது என்றால் மிகையல்ல என்றே கூறலாம்.

# பேரினவாதப் பிடிக்கு அப்பாற்பட்ட இடைக்கால நிர்வாகமே அவசியம்

## வலிகாமக் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

அரசியலமைப்பிற்குட்பட்ட எந்த நிர்வாக அமைப்பும், தமிழ் மக்களது உடனடி மீள்குடியேற்ற, புனர்வாழ்வுப் பணிகளை எவ்வித இடையூறுமின்றி, கையாள்வதற்கான அடிக்கட்டுமானத்தை கொண்டிருக்கப்போவதில்லை. எனவே, பேரினவாதப் பிடிக்கு அப்பாற்பட்ட வகையில் அரசியல் யாப்பிற்கு புறத்தே இயங்கவல்ல இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, உடனடி அவசியமாக உள்ளது என, வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது-

இராணுவ நெருக்கடிகளுக்கு முடிவுகட்டி, நல்லெண்ண சமாதான சூழ்நிலையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காகவே, போர்நிறுத்தத்தை உள்ளடக்கிய, புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ்வொப்பந்தம் செய்யப்பட்டு 14 மாதங்கள் பூர்த்தியாகியுள்ளன.

அத்துடன், ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. இணக்கம் காணப்பட்டுள்ள விடயங்கள் எவையுமே அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவில்லை. இதன் மூலம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அரசாங்கம் தவறிவருகிறது.

வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை என்பதன் அர்த்தம் - மக்கள் குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள், கடற் தொழிலுக்கான கடற்பரப்பிலிருந்து ஆயுதப்படைகளை விலக்கி மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடர் விளையாது இரா ணுவ நெருக்குவாரங்களை அகற்றுவதாகும்.

இந்தச் சமாதானக் காலத்தில் புலிகள் இயக்கம் போதியளவுக்கு நல்லெண்ணச் செயற்பாடுகளைக் காட்டிவருகிறது. அரசுடன் இணக்கம்காணப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்த ஒத்துழைப்புத் தருகின்றனர். நடைமுறைப்படுத்தி முன்னுதாரணமாக விளங்குகின்றனர்.

ஆனால், கடந்தகால அரசாங்கங்களால் காட்டப்பட்டு வந்த பேரினவாத வரலாற்றுப்பாரம்பரியம், தற்போதைய அரசாங்கத்தினது செயற்பாடுகளிலும் தென்படவே செய்கின்றது. பேச்சுவார்த்தையின் பங்காளியான அரசாங்கம் தனது சமாதானத்தின் மீதான கரிசனையைக் காட்டுவதற்குப் பதிலாக, வழமையான பேரினவாத மேலாதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்தி வருகிறது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினையை மனிதநேயக் கண்கொண்டு பாராது, அரசியல் வழிமுறையென்ற மேற்பூச்சின் கீழ், தொடர்ந்தும் இராணுவ நோக்கிலேயே செயற்படமுனைகிறது.

ஆயுதப்படைகள் இவ்வமைதிக்கான காலகட்டங்களிலும் விடுதலைப் புலிகளைச் சீண்டும் வகையில், பல கொலைத் தாக்குதல்களையும் பலதரப்பட்ட யுத்தநிறுத்த மீறல்களையும் கட்டவிழ்த்து விட்டபோதும், விடுதலைப்புலிகள் இவற்றையெல்லாம் பொறுமையுடன் தாங்கிக்கொண்டு சமாதானத்திலும், மக்கள் நலனிலும் தமது அக்கறையை வெளிப்படுத்தியே வந்துள்ளனர். இது அவர்களது பலத்தின் வெளிப்பாடு என்பதே உண்மையாகும். இணக்கம் காணப்பட்ட விடயங்களைச் செயற்படுத்த வெறும் வாக்குறுதிகளை மட்டும் தரும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது அர்த்தமற்றதாகும். எனவேதான், விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கான பாதையைச் சீராக்குவதற்கான கால அவகாசத்தை வழங்கியுள்ளனர்.

தமிழ் மக்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் என்பவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்த உருவாக்கப்பட்ட சிறான் அமைப்பு தனது முழுமையான செயற்பாட்டை வெளிப்படுத்த முடியாது தத்தளிக்கிறது. அரசாங்கத்தினதும், உச்சநிர்வாக அதிகாரம் படைத்த ஜனாதிபதியினதும் அரசியல் அதிகாரப் போட்டியினால் ஏற்பட்டுள்ள இழுபறி காரணமாக சிறான் செயற்படாது முடங்கிவிட்டது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ்த் தேசிய இனம் ஏமாற்றப்பட்டு வந்தது. மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்பட தயாரில்லை, என்பதனை அனைத்துலகம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அனைத்து அரங்கங்களிலும் பொருத்தமான செயற்திறன்மிக்க தலைமைத்துவத்தை தமிழ்த் தேசிய இனம் கொண்டுள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப்புலிகளின் நன்நோக்கத்தை தமிழ்த் தேசிய இனம் புரிந்துகொண்டுள்ளது.

இன்றுள்ள நிலைமையை மாற்றியமைத்து, தமிழ் மக்கள் சமாதானத்தின்பால் நம்பிக்கை கொள்ளும் வகையில், மக்களது மீள்குடியேற்றம், புனர்வாழ்வு தொடர்பான துரித செயற்திறன்மிக்க புதிய நிர்வாகக் கட்டமைப்பின் தேவை வரலாற்றின விளைபொருளாக எழுந்துள்ளது.

அரசியல் ரீதியான நிரந்தரத் தீர்வொன்றைக்காணும் முதல் அடியெடுப்பாக, விடுதலைப் புலிகளிடமே இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கப்பட வேண்டும். இது ஒன்றுதான் பேரினவாதத்தினால் விளைவிக்கப்படும் இடர்களை எல்லாம் சமாதானப் பேச்சுவார்த்தை தாண்டிச்சென்று நிரந்தர அமைதிக்கான பாதையில் முன்னேறிட உதவும்.

இது குறித்து- சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கவேண்டும். இல்லாவிடில், பாரிய பேரினவாத நெருக்கடியிலிருந்து தன்னை விடுவிக்க, சுயநிரணய உரிமைகொண்ட தமிழ்த் தேசிய இனம் பொருத்தப்பாடான செயற்பாடுகளை முன்னெடுப்பதொன்றே அரசியல் தீர்வுக்கான ஒரே வழிமுறையாகிவிடும் என, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாகனங்களின் நச்சுப்புகை; கட்டுப்படுத்த விரைவில் சட்டம்!

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

வாகனங்களினால் நச்சுப்புகை வெளியிடப்படுவதைக் கட்டுப்படுத்த, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வாகனங்களிலிருந்து - குறிப்பிட்ட அளவுக்குமேல் புகை வெளியேற்றப்படுவதைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்துவதற்கு, அடுத்த வருடம் நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

அத்துடன், அதிகளவு புகையை வெளிவிடும் வாகனங்களைக் கண்டறிவதற்கான கருவிகளைக் கொள்வனவு செய்து, பொலிஸாருக்கு வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்பின்னர், பொலிஸார் தீவிர நடவடிக்கையில் ஈடுபடுவர் என்றும் அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளது.

# நள்ளிரவில் மதுபோதையுடன் நடமாடுவோர் கைதாவர்!

## பொலிஸார் எச்சரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ். குடாநாட்டில், நள்ளிரவு வேளைகளில் மதுபோதையில் வீதிகளில் நிற்பவர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக, யாழ். நகரப் பகுதிகளில் - மதுபோதையில் இருப்போர், வீதியால் செல்பவர்களைத் தாக்கிவருகின்றனர். இதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 11 மணிக்குப் பின்னர், மதுபோதையில் பொது இடங்கள், வீதிகளில் நிற்பவர்களைப் பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கை ஏனைய இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(43)

# ஊனமுற்றோருக்கு உதவிபுரிய மருதங்கேணியில் விசேட குழு

## உதவி அரச அதிபர் தலைமையில் அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஊனமுற்றோர்களுக்கான பராமரிப்புச் சபை, உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதப்பிள்ளை தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை, அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

செயலக மட்டத்திலான இந்தச் சபை விஸ்தரிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் அமைக்கப்படவுள்ளது. ஊனமுற்றோர்களை அவர்களது வீட்டில் வைத்தே, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதே இச்சபையின் நோக்கமாகும்.

காலை இழந்தவர்கள், கையை இழந்தவர்கள், சித்த சுவாதீனமற்றவர்களுக்கு, அவர்களுக்கு ஏற்றவகையில் உதவி செய்வதே இச்சபையின் நோக்கமாகும். இதேவேளை- முதியோர் இல்லங்களுக்கு வயோதிபர்களை அனுப்பாமல், அவரவர் வீட்டில் வைத்தே பராமரிப்பதற்கும் இந்தச்சபை உதவும்.

ஊனமுற்றோர்களுக்கு வைத்தியசேவை தேவைப்படின் வைத்திய அதிகாரி உதவுவார். கல்வி சம்பந்தமான உதவிகளை கல்வி அதிகாரி வழங்குவார். கைத்தொழில் சம்பந்தமான விடயமாயின், கிராம உத்தியோகத்தர் அவர்களின் தேவையைக் கவனிப்பார்.

இவ்வாறு, பலதரப்பட்ட சேவைகளையும் வழங்கக்கூடிய வகையில் இச்சபை இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உலகவங்கி அதிகாரிகள் காரைநகருக்கு விஜயம்!

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற, 'நியாப்' வேலைத்திட்டங்களை அவதானிப்பதற்கென உலகவங்கி அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வந்தது.

ஜெகநாதன் மற்றும் நிஹால் பெர்னாண்டோ ஆகியோர் கொண்ட இந்தக் குழுவினர், கடந்த புதன்கிழமை காரைநகர் மத்தியில் உள்ள சாம்பலோடை உவர்நீர்த் தடுப்பணை வேலைத் திட்டத்தைப் பார்வையிட்டனர்.

அத்துடன், கிராம மக்களுடனான கலந்துரையாடலிலும் இவர்கள் பங்குபற்றியதுடன், மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தனர்.

(99)

# உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் யாப்புக்கு விரோதமென வழக்கு!

## கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கலானது

(கொழும்பு)

உள்ளூராட்சிசபை திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்று, மனித உரிமைகள் அபிவிருத்திக்கான சட்டத்தரணிகள் சங்கம் - உயர் நீதிமன்றத்தில் ஆட்சேப மனுவொன்றைத் தாக்கல்செய்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலைப் பிற்போடுவதற்கும், புதிய வேட்புமனுத் தாக்கல்செய்ய வசதி செய்யவுமே, அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளது.

இந்தச் சட்ட மூலமே அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி, மனித உரிமை அபிவிருத்திக்கான சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் ஆசேபமனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பின் 3 ஆவது, 4 ஆவது பிரிவுகளுக்கு முரணானது என்றும் - இந்தமனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களை நிராகரிப்பதால், இளவயது வேட்பாளர்களாக பட்டியலில் இடம்பெற்ற பலர் - இனி அந்த விசேட ஏற்பாட்டில் போட்டியிடமுடியாத நிலை ஏற்படும். இது மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா என ஆய்வு செய்தல் வேண்டும் என்றும், உயர் நீதிமன்றத்திடம் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுள்ளது.

# சிறுவர் நாடாளுமன்றக் கூட்டம் இன்று வீரசிங்கம் மண்டபத்தில்!

(யாழ்ப்பாணம்)

சிறுவர் நாடாளுமன்ற கூட்டம் இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் சிறுவர் நாடாளுமன்றக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல சிறுவர்கள் பங்குபற்றவுள்ளர்.

இன்று காலை 10 மணியிலிருந்து நண்பகல் 2 மணிவரை இடம்பெறும் இந்நிகழ்வில், இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி சி.வரதராஜா, யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சிறுவர் நாடாளுமன்றத்தில், சிறுவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பிரச்சனைகள் என்பன ஆராயப்படவுள்ளன.

# வவுனியா வைத்தியசாலை சிரமதானத்தில் போராளிகள்!

(வவுனியா)

உலக சூழல் தினத்தினை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வவுனியா பொது வைத்தியசாலை - தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆண், பெண் போராளிகளாக, சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்டோர், இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (03)

# புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் 70 மில்லியன் ரூபா யாழிற்கு ஒதுக்கீடு!

## வீதிகளைத் திருத்துவதற்கு 10 மில்லியன் ரூபா

புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சினால், இவ்வருடம் யாழ்.மாவட்டத்திற்கு 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் யாழ்ப்பாணத்திலுள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 10 மில்லியன் ரூபாவும், குருநகரிலுள்ள தொடர்மாடிக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கும், அங்கு குடிநீர் மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதற்கு 46 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். பொது நூலகத்திற்கு மேலதிகமாக இருபது இலட்சம் ரூபாவும், சிதைவடைந்த நிலையிலுள்ள யாழ்.பிரதேச செயலகத்தை புனரமைப்பதற்கு 20 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பண்ணையிலுள்ள மாட்டுநோய் சிகிச்சை நிலையத்தைப் புனரமைப்பதற்கும் மற்றும் பல வேலைத்திட்டங்களைச் செய்வதற்கும் இந்நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (லி)

# யாப்பில் சிறு மாற்றம் செய்தாலும் 24 மணிநேரத்தில் அரசு கவிழும்!

## பிரதமர் ரணிலுக்கு அனுரா எச்சரிக்கை

(கொழும்பு)

பல முக்கிய நடவடிக்கைகளை எடுக்க ஜனாதிபதி தயாராக இருப்பதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை ஒரு பெரிய நடவடிக்கை என்றும், அவர் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் யாப்பில் சிறு மாற்றம் செய்யப்பட்டாலும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை 24 மணித்தியாலத்துக்குள் கலைத்து நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவார் என்றும், அனுரா குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாக - அமைச்சர் ஜோன் அமரதுங்காவிடமிருந்து பொலிஸ் திணைக்களம் பொறுப்பேற்கப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.



'நமது ஈழநாடு' அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட பல்லியல் நிகழ்ச்சியில் - இசை நிகழ்ச்சி நடைபெறுவதைப் படத்தில் காணலாம் (46)

### பிரபல பத்திரிகையாளருக்கு

# அமைச்சர் மகிந்த விஜேசேகர கொலை மிரட்டல் விடுத்தார்!

மீன்பிடி, கைத்தொழில் அமைச்சர் மகிந்த விஜேசேகரவும்,அவரது குழுவினரும் - முன்னாள் லேக்ஹவுஸ் தலைவரும், பிரபல பத்திரிகையாளருமான லூசியன் இராஜகருணநாயக்காவுக்கு கொலைப் பயமுறுத்தல்விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த 30ம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.

இது சம்பந்தமாக லூசியன் இராஜகருணநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியப்படுத்தியதுடன் பொலிஸ் தலைமையகத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

லூசியான் இராஜகருணநாயக்க, வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவருக்கு விருந்தளிக்கும் நோக்கத்துடன், ஹில்டன் ஹோட்டேலுக்கு சென்றிருந்தார். அங்கு ஒரு மேசையில் அமர்ந்திருந்த அமைச்சர் மகிந்த விஜேசேகரவும் குழுவினரும் பெரும் சத்தத்துடன் சிரித்துப் பேசினார்கள். இது சம்பந்தமாகவே அவர்கள் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

பின்பு இரவு 10 மணியளவில் லூசியன் இராஜகருணநாயக்க வெளியில் வரும்போது, அமைச்சரின் கையாள் ஒருவர் வந்து எச்சரிக்கும் தொனியில் பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மரம் விழுந்து காயமுற்றவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கூரையின் மீது வேலை செய்து கொண்டிருந்த போது மரம் தலையில் விழுந்து காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றி மரணமானார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செல்லையா சித்திரவேல் (வயது-48) என்பவரே மரணமானவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - கடந்த மாதம் 27 ஆம் திகதி, புதுக்குடியிருப்பில் உள்ள தனது வீட்டின் கூரையில் வேலை செய்து கொண்டிருந்தபோது, தவறுதலாக மரமொன்று இவரது தலையில் விழுந்ததினால், படுகாயமடைந்த நிலையில் மேற்படி நபர், அம்புலன்ஸ் வண்டிமூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு - சிகிச்சை பெற்று வந்தபோதே சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் மரணமடைந்தார்.

## வீதிப் புனரமைப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் மக்கள் மீள்குடியமர்ந்துவரும், மாநகரசபைக் குட்பட்ட கரையோரப் பிரதேசங்களின வீதிகள், திருத்தப் பணிக்காக - நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் தகுந்த வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

இதன்படி - யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 28 வீதிகள் தெரிவு செய்யப்பட்டு, யாழ். மாநகரசபையால் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான நிதி- யாழ்.செயலகத்தின் 'நிகொட்' திட்டம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ரா)

# சுற்றுச்சூழலைப் பாதுகாக்க விழிப்புணர்ச்சி செயற்பாடுகள்

## பொருண்மிய மதியுரையகம் அறிவிப்பு

உலக சூழல் தினத்தையொட்டி பத்து அம்ச விழிப்புணர்வுச் செயற்திட்டம் ஒன்றைப் பொருண்மிய மதியுரையகம் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்துள்ளது.

'சூழலைப் பேணுவோம் தேசத்தைக் காப்போம்' என்ற தலைப்பின் கீழ் சூழலைப் பேணப் பத்து அம்சத் திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது. கடந்த 5 ஆம் திகதி முதல் இரு வாரங்களுக்கு தம்முடன் இணைந்து, தமது திட்டங்களுக்கு கரம் கொடுக்கும்படி மக்களுக்குப் பொருண்மிய மதியுரையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மரங்களை நாட்டுவோம், வனத்தைப் பாதுகாப்போம், கண்டல்களைப் பாதுகாப்போம், நீரைச் சிக்கனமாகப் பாவிப்போம், நன்னீரைச் சுத்தமாக வைத்திருப்போம், மண்ணரிப்பை நிறுத்துவோம், சுற்றாடலைச் சுத்தமாக்குவோம், வீதியில் குப்பைகளைத் தடுப்போம், பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம், கழிவுகளை உரமாக்கி மீள் பாவனையை ஊக்குவிப்போம் போன்றவையே அந்தப் பத்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளாகும்.

# இதுவரை பிறப்புப் பதியாதோருக்கு யாழ். வைத்தியசாலையில் வாய்ப்பு

## சிறுவர் பாதுகாப்புக் குழு நடவடிக்கை

இதுவரை பிறப்பு பதிவு செய்து கொள்ளத் தவறிய, 18 வயதுக்குட்பட்டோரைப் பதிவு செய்துகொள்வதற்கு யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு நடவடிககை எடுத்துள்ளது.

இவ்வாறு புதிதாக பிறப்புப் பதிவு செய்ய விரும்புபவர்கள் - யாழ். போதனா வைத்தியசாலையில் முப்பதாம் இலக்க அறையில் இயங்கும், மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழுவுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

பிறப்புப் பதிவு செய்ய விரும்புபவர்கள் சம்பந்தப்பட்ட கிராம அலுவர் ஊடாக, பிரதேச செயலரின் அத்தாட்சிக் கடிதம் மற்றும் தேவையான ஆவணங்களுடன், மேற்படி விலாசத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு- மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் தீபன் சுந்தரராஜ் கேட்டுள்ளார்.(43)

## யாழ். வைத்தியசாலைக்கு தமிழ்ப் பொலிஸார்

யாழ். போதனா வைத்தியசாலை பொலிஸ் பகுதிக்கு இரு தமிழ்ப் பொலிஸார், கடந்தவாரம் முதல் நியமிக்கபபட்டுள்ளனர். இதனால், விடுதிகளில் நோயாளரிடம் இருந்து வாய்மூல முறைப்பாட்டைப் பெறுவதில் இருந்து வந்த மொழிப் பிரச்சனை தற்போது ஓரளவு தணிந்துள்ளது. (111)

# முஸ்லிம் புத்திஜீவிகள் குழு புலிகள் பகுதிக்கு விஜயம்!

## நல்லெண்ணத்தை வளர்க்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் புத்திஜீவிகள் 30 பேர் அடங்கிய சமாதானக் குழுவொன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு, நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் செல்கின்றது.

ஏறாவூர், ஓட்டமாவடி, காத்தான்குடி ஆகிய முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து தலா பத்து பேர் இக்குழுவில் பங்குகொள்வதாகவும், தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் இடையிலான நலலுறவை மேலும் வலுப்படுத்தவே இந்த விஜயத்தை மேற்கொள்வதாக- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், வீடமைப்புப் பிரதியமைச்சருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.


## வைகாசிப் பொங்கல்

(நவிண்டில்)


அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா - எதிர்வரும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறவுள்ளது. (116)

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளிலிருந்து...


வலிகாமம் வலய கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தேசியக் கொடியை ஏற்றுகிறார்.


உரும்பிராயில் தியாகி பொன். சிவகுமாரனின் சிலை.


வலிகாமம் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வசந்தி பொதுச் சுடரை ஏற்றுகிறார்.



யாழ். இந்துக் கல்லூரி அதிபர் சிறிகுமரன் பொதுச்சுடர் ஏற்றுகிறார்.



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினர்.


பொன் சிவகுமாரன் படத்திற்கு பல்கலைக்கழக மாணவன் நிரஞ்சன் ஈகச்சுடர் ஏற்றுகிறார்.


மேஜர் முரளியின் உருவப்படத்திற்கு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் மலர் மாலை அணிவிக்கிறார்.


பண்ணிசைக்கும் மாணவிகள்.


வடமராட்சியில் நடைபெற்ற எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினர்.

# பலஸ்தீனப் பிரதமருடனான பேச்சை ஹமாஸ் போராளிகள் முறித்தனர்!

## ஜோர்ஜ் புஷ்ஷின் சமாதானத் திட்டத்துக்கு வலுக்கிறது எதிர்ப்பு




அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் புதிய சமாதானத் திட்டத்தின்படி - இஸ்ரேலியர்களுடன் ஆயுதப் போராட்டத்தை நிறுத்துவதாக அறிவித்த பலஸ்தீனப் பிரதமருக்கு எதிராக - ஹமாஸ் போராளிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளதோடு, அவருடனான சமாதானப் பேச்சுக்களையும் முறித்துள்ளனர்.

ஜோர்டானில் - இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனுடன் இணக்கமொன்றுக்கு வந்த பலஸ்தீனத்தின் புதிய பிரதமர் மஹ்மூட் அப்பாஸுக்கு - பலஸ்தீனக் கடும்போக்காளர்களிடம் எழுந்துள்ள எதிர்ப்பை இந்த ஆட்சேபம் காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - பலஸ்தீன ஆயுதக்குழுக்களிடமிருந்தான ஆயுத தளபாடங்கள் களையப்பட்டாக வேண்டுமென்ற கருத்தும் - அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தரப்புக்களிலிருந்து - புதிய பலஸ்தீனப் பிரதமருக்கு எழுந்திருக்கின்றது.

ஆனால், இந்தப் பணி அப்பாஸுக்கு பெரும் நெருக்கடிகளையும் ஆபத்தையுமே தரும் எனக் கூறப்படுகின்றது. இதேவேளை - நேற்றுமுன்தினம் இரவு இஸ்ரேலியப் படையினருடனான சண்டையில் இரண்டு ஹமாஸ் போராளிகள் கொல்லப்பட்டனர்.

## ஜேர்மன் பிரஜை ஒருவரும் செப்.11 தாக்குதலுடன் தொடர்பு

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த தற்கொலைத் தாக்குல்களில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் ஜேர்மன் பிரஜை ஒருவரை, பிரான்ஸ கைதுசெய்துள்ளது.

உலகவலம்

கிறிஸ்ரியன் கான்ஸ்ஸார்ஸ்கி என்ற இந்த 36 வயது நபர், ஏற்கனவே தேடப்பட்டு வந்த மொறோக்கோவைச் சேர்ந்த நபர் ஒருவருடன் தொடர்புகளை வைத்திருந்ததைத் தொடர்ந்து கைதானார்.


கொங்கோவில் அமைதிகாப்புப் பணியில் ஈடுபட்டுவரும் பிரெஞ்சுப் படைகள், அந்நாட்டுப் படைகளுடன்.

# மெதடிஸ்த சபை மண்டபம் பருத்தித்துறையில் திறப்பு

கடந்த யுத்த அனர்த்தங்களால், சேதமடைந்த பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை மண்டபம் எதிர்வரும் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபைப் போதகர் அருட்திரு. ஜி.ஏ.சதீஸ் அடிகளார் இத்திறப்புவிழாவிற்குத் தலைமை தாங்குவார்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை மகாசங்கத் தலைவர் அருட்திரு ஆர்.ரி.பெர்னாண்டோ அடிகளார் இத்திருச்சபை மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

ஆறு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இம்மண்டபத்திற்கான நிதியை வெளிநாட்டிலுள்ள திருச்சபை அங்கத்தவர்கள் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# கடந்த 12 வருடங்களாக மூடப்பட்டுள்ள மாதகல் வீதி

(பண்டத்தரிப்பு)

மாதகலில் இருந்து பெரியவிளான் சந்திவரை உள்ள வீதி கடந்த 12 வருடகாலமாக பொதுப் போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாதுள்ளது. இவ் வீதிக்கருகாமையில் இராணுவத்தினர் முன்னர் அமைத்திருந்த மண் அணை உள்ளது. இதனால், அங்கு மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இவ்வீதியின் பெரும்பகுதி வயற்காணிகளின் ஊடாகவே அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வயற்காணிகளுக்கு விவசாயிகள் மாட்டு வண்டில், லாண்ட்மாஸ்ரர், ட்ராக்டர் போன்றவற்றை விவசாயத் தேவைகளுக்கு இவ்வீதி வழியாக கொண்டு செல்லமுடியாதுள்ளது. அத்துடன் மாதகலில் இருந்து பெரியவிளான், இளவாலை ஆகிய இடங்களுக்குச் சென்று வருபவர்கள் பண்டத்தரிப்புச் சந்திக்கு ஊடாக மேலதிகதூரம் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது.

செடிகள், பற்றைகள் வளர்ந்தும் பலத்த சேதமடைந்தும் உள்ள இவ் வீதியை புனரமைத்துத் தருமாறு, மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் - வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது. (43)

## சாவகச்சேரியில் பிரசவ விடுதி

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில், 55 லட்சம் ரூபா செலவில் பிரசவ விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம், நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

இதற்கான அடிக்கல்லை, சுகாதாரசேவைப் பணிப்பாளர் நாட்டினார். இந்நிகழ்வில், பிரதேச செயலர், சாவகச்சேரி வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகைபாகன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்தப் பிரசவவிடுதி 'நிகொட்' அமைப்பின் நிதி ஒதுக்கீட்டின் கீழேயே அமைக்கப் படவுள்ளது. (25)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலையில் கொடியேற்ற தடைவிதித்த படையினர்

(திருகோணமலை)

திருகோணமலையில்- இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.



இவ் எழுச்சி நிகழ்வுகளின்போது, இராணுவத்தினரின் பயமுறுத்தல்களையும் பொருட்படுத்தாமல், சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்றுதிரண்டு எழுச்சிப் பேரணியையும் எழுச்சிக் கூட்டத்தையும் நடாத்தினர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் ஆரம்பமாகிய எழுச்சிப் பேரணி, உட்துறைமுக வீதி வழியாக சிறுவர் பூங்காவைச் சென்றடைந்தது.

அங்கு நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில், தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றப் படையினர் தடை விதித்தனர். தமது கட்டுப்பாட்டிலுள்ள இந்தப் பகுதியில், தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றக்கூடாது என அவர்கள் கூறினர். ஆனால் - படையினரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், மாணவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி, நிகழ்வினை நடாத்திவிட்டு, நிகழ்வு முடியும் நேரத்துக்குச் சற்றுமுன்பே கொடியினை இறக்கினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றுவதை நிறுத்துமாறு, திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்காணிப்புக் குழுவின் இந்த கோரிக்கை, மாணவர்கள் தரப்பில் விசனத்தை ஏற்படுத்தியதாக மாணவர் பிரதிநிதி தெரிவித்தார்.

# பத்தாயிரத்திற்குமதிக மாணவர் வவுனியாவில் ஒன்று திரண்டனர்

## குழப்பும் நடவடிக்கையில் படையினர் ஈடுபாடு

(கொழும்பு)

வவுனியாவில், நேற்று பத்தாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்ற - தமிழீழ மாணவர் எழுச்சி நாள் பேரணி வெகு சிறப்பாக நடைபெற்ற அதேவேளை - நிகழ்ச்சிக்குச் சென்ற மாணவர்களைப் படையினர் தடுத்து நிறுத்தியுமுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில், தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள், வைரவப் புளியங்குளத்திலுள்ள சிறுவர் பூங்காவில் நடத்தப்பட்டன.

இந்த எழுச்சிதின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக, வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள், பாடசாலையிலிருந்து செல்ல முற்பட்டவேளை - வீதியில் நின்ற இராணுவத்தினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இந்த நிகழ்வுக்குச் செல்வோரைப் பிடிப்போம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை- வவுனியா மாவடத்திலுள்ள மேலும் சில பாடசாலை மாணவர்களையும் படையினர் எழுச்சி நிகழ்வுக்குச் செல்லவிடாது தடுத்து நிறுத்தியதாகத் தெரியவருகிறது.

அதேவேளை - எழுச்சி நாள் நிகழ்வையொட்டி, வவுனியாப் பகுதி மாணவர்களால் ஒட்டப்பட்டிருந்த எழச்சிநாள் சுவரொட்டிகளுக்கு மேலாக - இந்நிகழ்வில் கலந்து கொள்ளக்கூடாது என எழுதப்பட்டிருந்த உரிமை கோரப்படாத சுவரொட்டிகளும் இரவோடிரவாக ஒட்டப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை மாணவர்கள் இந்த அநாமதேயச் சுவரொட்டிகளை அகற்றிவிட்டு எழுச்சிநாள் சுவரொட்டிகளை மீள ஒட்டினார்கள்.


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தெய்வப் பிறப்பு | தெய்வீக அமர்வு |
|---|---|
| 11 - 09 - 1984 | 29 - 05 - 2001 |



செல்வி
துஷ்யந்தி இலங்கநாயகம்
(துர்க்கா)

ஆறாத்துயரத்தைத் தந்து
ஆழ்ந்த உறக்கம் கொண்டாயோ- எம் குஞ்சுவே!
ஆலமரம் போல் விருட்சமாய் திகழ்வாய் என்றிருந்தோம்
ஆறாத்துயரிலெமை ஆழ்த்தி விட்டு எங்கம்மா சென்றாய்?
அன்போடு 'துர்க்கா' என்றுனை அழைத்தோம்
ஆறாத கண்ணீரை எமைச் சுமக்க வைத்தாய்!

*சு. இலங்கநாயகம்.*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

*என்றென்றும் வற்றாத சோகத்தில்,*
*அம்மா, அப்பா, அண்ணன்மார்,*
*அண்ணிமார்.*


# தலைவரின் கரத்தைப் பலப்படுத்த மாணவர்கள் அணிதிரள வேண்டும்

## யாழ். அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ், மாணவச் செல்வங்கள் அனைவரும், எமது தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்தி, எமது தலைவருக்குப் பின்னால் அணிதிரள வேண்டும் என, யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் அழைப்பு விடுத்தார்.

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு, நேற்றுக்காலை யாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற எழுச்சி நிகழ்வில் உரையாற்றும் போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடுதலைப் போராட்டம் தியாகத்தாலும், நேர்மையாலுமே வழிநடத்தப்பட்டது. மிகப் பலம் பெற்ற விடுதலை இயக்கமாக இன்று நாம் வளர்ந்து நின்றாலும் - இந்த விடுதலைக்கு அத்திவாரமாக, ஆரம்ப காலத்தில் மிக மிக எழுச்சியை ஏற்படுத்திய தியாகி சிவகுமாரன் அவர்களின் நினைவு நாளை இன்று நாங்கள் அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம் என்றார்.

## எங்கள் பாடசாலை...

குலம் எழுந்துநின்று எழுச்சி கொள்ளும் திருநாள் இன்று.

விடுதலைக்கான கல்வி வேண்டிக் காத்திருக்கும் மாணவர் சமுதாயம் இணைந்து, இறுகிய கரங்களை உயர்த்தியபடி தெருவில் இறங்கி உரிமைக்குரல் எழுப்பும் நாள்.

இந்த நிகழ்வு - எமது நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுகின்ற நிகழ்வு. நீண்ட காலமாக தமிழீழ மாணவர்களாகிய நாம், நிறைவான கல்வி பற்றிச் சிந்திக்க வாய்ப்பின்றி இருந்து வருகிறோம்.

தமிழர் தாயகப் பகுதியில் பல பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பால் இயங்கமுடியாத நிலையில் உள்ளது. ஒரு விதத்தில் இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, அல்லது இராணுவத்தால் சிதைக்கப்பட்டுள்ளது. அன்றேல் அயற் பிரதேசங்களில் இராணுவ நடமாட்டம், இருப்புக்கள் காரணமாக அன்றாடம் பயத்துடன் கூடிய நிலைமைக்கு மாணவ சமுதாயம் தள்ளப்பட்டுள்ளது.

நாங்கள் எங்கள் சொந்தச் சூழலில், எங்கள் சொந்தப் பள்ளிக் கூடங்களிலேயே படிக்க விரும்புகின்றோம். அங்குதான் எங்களால் நிம்மதியாகப் படிக்க முடியும்.

அன்பான சிறிலங்கா இராணுவ வீரர்களே! நாங்கள் எங்கள் சொந்தப் பள்ளிக்கூடங்களிலேயே வந்து படிக்கவே விரும்புகின்றோம். ஆகவே நீங்கள் அவற்றை விட்டு உங்கள் வீடுகளுக்குப் போய்விடுங்கள். எங்கள் இடங்களை எங்களுக்குத் தாருங்கள்.

எழுச்சி மிகுந்த, பொங்கும் மனதுள்ள, துடிப்பான சமூகமாக வாழவே நாங்கள் விரும்புகின்றோம்.

எமது இனத்தின் விடியலுக்கான தேடலில் எமக்கும் மிகுந்த பங்குண்டு என்றே நாங்கள் நம்புகிறோம்.

எமது இந்த மன எழுச்சிகளை, உணர்ச்சிகளை, வெளிப்படுததும் எந்த ஒரு நிகழ்வையும் எவராவது தடை செய்வதை நாங்கள் வெறுக்கின்றோம்.

- என்றும் அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கண்காணிப்புக்குழு...

பிடித்தார் என்று தெரிகிறது.

மேற்படி சம்பவம் நடைபெற்றது தொடர்பாக, உடனடியாகவே யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி ஒலே புரூணடத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது, தொலைபேசித் தொடர்பு தடைப்பட்டிருந்தது.

இதனால்- மேற்படி சம்பவம் இடம்பெற்ற இடத்தில் கூடியிருந்த மக்களுடன் இளம்பரிதியும் சேர்ந்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்குச் சென்றபோது, அங்கு காவலாளி மட்டுந்தான் இருந்தார்.

எனவே, அங்கிருந்து மீண்டும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி, ஒலே புரூண்டம் தங்கியிருக்கும் விடுதிக்கு இளம்பரிதி தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, நடைபெற்ற சம்பவம் தொடர்பாக எடுத்து விளக்கினார். எனினும், ஒலே புரூண்டம் இச் சம்பவத்தைக் கவனத்தில் கொள்ளாது, இச்சம்பவத்துடன் தொடர்பில்லாத விடயங்கள் பற்றியே பேசினாராம்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தை வந்து பார்வையிடும்படியும், இதனால தொடரப்போகும் சிக்கலை முடிவுக்குக் கொண்டு வரலாம் எனவும் இளம்பரிதி கூறினார். ஆனால், ஒலே புரூண்டம் சம்பவம் இடம்பெற்ற இடத்தைப் பார்வையிட மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

ஆயினும், இளம்பரிதியும் அங்கு கூடிநின்ற மக்களும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி ஒலே புரூண்டம் வருவார் என்ற நம்பிக்கையில், சம்பவ இடத்திற்குச் சென்று பல மணி நேரம் காத்திருந்தனா. ஆயினும் ஒலே புரூண்டம் அங்கு வரவில்லை.

இதனால் கோபமடைந்திருந்த அங்கு நின்ற மக்கள் - ஒலே புரூண்டத்தின் இந்த நிலைப்பாடு தொடர்பாக தமது கவலையையும் விசனத்தையும் தெரிவித்தனர்.

## நினைவுத்...

கவச வாகனத்திலும், ட்ரக் வண்டியிலும் திடீரென அவ்விடத்திற்கு வந்த சுமார் நூற்றி ஐம்பது இராணுவத்தினர், நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தினைச் சுற்றிவளைத்ததோடு, அங்கிருந்த வாழைத் தோட்டங்களிலும் தெருக்களிலும் மறைந்திருந்தனர்.

பின்னர், அங்கு கூடிநின்ற மாணவர்களிடம் 'இந்தத் தூபியை யார் கட்டியது' என்று கடும் சீற்றத்துடன் வினவிவிட்டு, அருகில் வெளிச்சத்திற்காகக் கட்டப்பட்டிருந்த மின் விளக்குகளைக் கழற்றி எறிந்தனர்.

இதன்போது- அங்கு கூடிநின்ற மக்கள், கடந்த காலப்பகுதியில் இராணுவத்தினரால் சிதைக்கப்பட்ட நினைவுத் தூபியையே நாம் தற்போது புனரமைக்கின்றோம் எனக் கூறினர்.

இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் புனரமைப்புச் செய்யப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்னால், அமைக்கப்பட்டிருந்த கொடிக்கம்பத்தை ஏறிமிதித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் அங்கு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் - இராணுவத்தினர் இங்கு வந்து மாணவர்களையும், மக்களையும் அச்சுறுத்துவதுபோல் நடந்து கொள்வது பொருத்தமற்ற செயல் என எடுத்துக்கூறினர்.

இதன்போது- அங்கிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் - தான் கேணல் ஹேரத் எனக் கூறிவிட்டு- இவ்வாறு சிலையமைப்பது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு விரோதமானது எனத் தெரிவித்தார்.

இதன்போது- அங்கு கூடிநின்ற மக்கள், இக்காணி தனியாருக்குச் சொந்தமானது என்பதுடன், இக்காணியில் முன்பு இந்திய இராணுவத்தினருடனான மோதலின்போது வீரச்சாவடைந்த போராளிகளின் நினைவாக இது அமைக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவித்தனர்.

இத்தூபி அமைப்பு இராணுவ நோக்கம் கொண்டதல்ல. அத்துடன் இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலும் அல்ல, என்று மக்கள் அப்படையதிகாரியிடம் தெரிவித்தனர்.

ஆனாலும் - தொடர்ந்து பெரும் அட்டகாசத்துடன் நடந்து கொண்ட இராணுவத்தினர் அப்பகுதியில் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து "நாம் மீண்டும் இரவு வருவோம்" என மக்களை மிரட்டும் தொனியில் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றனர்.

இதேவேளை - இராணுவத்தினர் வந்த வாகனத்தின் இலக்கத்தகடும், இலைகுழைகளினால் மறைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(க.லி)

## தேசியத் தலைவரின்...

**வலிகாமத்தில்**

வலிகாமம் கோட்டப் பாடசாலைகளின், மாணவர்கள் அனைவரும் யாழ். மத்திய கல்லூரியில் ஒன்று திரண்டு, அங்கிருந்து பேரணியாக யாழ். இந்துக் கல்லூரியைச் சென்றடைந்தனர்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து, காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந்த எழுச்சிப் பேரணியில் - பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர்கள் முன்செல்ல, அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பெரிய உருவப்படம் ஒன்றினை மாணவர்கள் தாங்கிச் சென்றனர்.

இவர்களைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் தமது கரங்களில் தேசியத் தலைவரின் படங்களைத் தாங்கியவாறு, எழுச்சிக் கோஷங்களுடன் பேரணியாகச் சென்றனர்.

இந்த மாணவர் எழுச்சிப் பேரணி- மடம் வீதி வழியாக வேம்படிச் சந்தியைச் சென்றடைந்து, வேம்படி வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்தது. பின்னர் - அங்கிருந்து கஸ்தூரியார் வீதி வழியாக வின்சன் தியேட்டர்ச் சந்தியை அடைந்து, அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக - யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தைக் நண்பகல் 11.45 மணியளவில் சென்றடைந்தது.

பின்னர், அங்கு தமிழீழ மாணவர் எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது, பொதுச் சுடரினை - வலிகாமம் கோட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் வசந்தி, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் சிறிக்குமரன் ஆகியோர் ஏற்றினர். தேசியக் கொடியினை - யாழ். கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றிவைத்தார்.

**வடமராட்சியில்**

நெல்லியடி, நாவலர் மடத்திலிருந்து ஆரம்பமாகிய எழுச்சி ஊர்வலம் - பாண்ட் வாத்திய இசையுடன், நெல்லியடிச் சந்தியூடாகச் சென்று, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தைச் சென்றடைந்தது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவன் அ.அரவிந்தன் தலைமையில், அங்கு எழுச்சிக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் - பொதுச் சுடரினை வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை - விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ப.லோறன்ஸ் ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரினை - மாவீரர் மேஜர் சோதியாவின் தந்தையார் மைக்கல், மாவீரர் மேஜர் அருள்செல்வனின் தந்தையார் சி.கணபதிப்பிள்ளை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் சி.சேதுராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மாவீரர்கள் - பொன்.சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோரின் திருவுருவப் படங்களிற்கு, தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் எம்.குட்டித்தம்பி, வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ.கனகரத்தினம் ஆகியோர் மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினர்.

**தீவகத்தில்**

நெடுந்தீவில் முதன்முறையாக, தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் மிகவும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு மத்தியில் உள்ள மாவீரர் நினைவிடத்திலிருந்து மாணவர்கள் ஒன்றுதிரண்டு, பாண்ட் வாத்திய இசையுடன் பிரதான வீதியூடாக நெடுந்தீவு மகா வித்தியாலயத்தை வந்தடைந்தனர்.

அங்கு- தமிழீழத் தேசியக் கொடியினை நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈழமாறன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து, தியாகி பொன். சிவகுமாரனின் உருவப் படத்திற்கு- அரசியற்துறையைச் சேர்ந்த கோபித், மலர் மாலையை அணிவித்தார். தொடர்ந்து, சிறப்புரைகள் இடம்பெற்றன. (116,113,13,லி)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.